கோரிக்கை (1)	ரூபாய் ஆயிரத்தில் (2)
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி	
57. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு	1,51,53,72
58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு	6
59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	1,72
60. பல்வகை மூலதனச் செலவு	20
மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	**1,53,02,06**
இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—	
61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	22
பெருமொத்தம்	**2,66,14,77**

5. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1990-1991, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1990-91 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகின்றேன்.

பொதுக் கணக்குக் குழு, 1990-91 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகையான செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1990-91 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டப்பேரவைமுன் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது. அவ்வாறே, 1990-91 ஆம் ஆண்டு மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள், தற்போது தாக்கல் செய்யப்படுகின்றன. இம் மிகைச் செலவு மொத்தம் 269.66 கோடி ரூபாயாகும். மேற்சொன்ன ஆண்டில் "கல்வி", "கூட்டுறவு", "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்", "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" ஆகியவற்றின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

இடைநிலை ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஆகியோருக்குச் சம்பளம் மற்றும் படிகள் திருத்தியமைக்கப்பட்டதாலும், ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில், ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரையின் பேரில் சம்பள நிலுவைகளைப் பெற்றுத் தந்ததாலும், வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் நிலுவைகளைச் சேர்த்ததாலும், கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானிய சம்பளவீதம் அளித்ததாலும், "கல்வி" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்டதாலும், ஓய்வூதியத்தில் ஒரு பகுதி மொத்தமாக்கப்பட்டதாலும், ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் உயர்வீதத்தில் அகவிலைப்படி அளித்ததாலும், "ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

சில கழகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் வழிவகை முன்பணங்கள் அனுமதிக்கப்பட்டதால், "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டி அமர்கிறேன்.

நிறைவேற்றப்பெற்ற 1990-1991 ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை	ரூபாய்
அ. வருவாய்க் கணக்கில் செலவு—	
2. மாநில ஆயத் தீர்வைத் துறை	16,15,323
3. மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்	4,47,508
5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம்	27,70,330
7. மாநிலச் சட்டமன்றம்	8,28,899
14. சிறைச்சாலைகள்	20,93,286
17. கல்வி	126,15,38,219
23. கூட்டுறவு	26,86,61,159
29. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்	38,89,714
30. சமூக நலன்	7.25,41,583
31. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்	1,25,66,380
37. பொதுப் பணிகள்-கட்டடங்கள்	4,81,80,238
38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்	1,09,17,242
41. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,31,21,178
42. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	26,05,72,463

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	ரூபாய்
45. காட்டுவளத் துறை	1,36,92,960
47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்	14,02,398
மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு	197,48,38,880

ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—

50. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	8,36,580
53. பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு	19,54,942
54. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	2,42,24,989
55. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	15,50,801
மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு	2,85,67,312

இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

59. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	68,95,43,025
பெருமொத்தம்	269,29,49,217